இலவச காலாண்டு சமய இதழ்



# அகர தீபம்

www.akaram.eu

13.01.2023 - 14.03.2023



## தாசிகுலப் பெண்ணான கண்டகி

## நாகலிங்கப்பூ விசேஷங்கள்

## சிவலிங்கம் பற்றி ஆராய்ச்சியில் கிடைத்த முடிவு

FREE MAGAZINE

9 ஆம் ஆண்டில்

மாலை : 08 மலர் : 01

திருவள்ளுவர் ஆண்டு 2053

# நுழைவாயில்..

அகர தீபம் வாசக அன்பர்களுக்கும், விளம்பர தார வள்ளல் பெருமக்களுக்கும் எமது ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தமிழர் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சி கொள்கிறோம். நமக்கான எல்லா கதவுகளும் அடைபட்ட நிலையிலும், நம் அனைவருக்கும் தன் வாசலை அகலத் திறந்து வரவேற்று, ஆறுதலைத் தருவது எமது கடவுள் நம்பிக்கையும், அதற்கான அறிவும், ஆன்மீகத் தேடலும்தான். அதைத்தான் அகர தீபம் தனது ஆன்மீக அன்பர்களுக்கு வழங்கி வருகின்றது.

சென்ற இதழில் நாம் குறிப்பிட்டது போலவே அறிவியலும், விஞ்ஞான கண்டுப்பிடிப்புகளும், கொரோனா என்கிற உலகப் பெருந்தொற்று நோயின் அழிவிலிருந்தும், உலக மக்களைக் காப்பாற்றத் தவறிவிட்டதோடு, அதன் புது அவதாரமான ஒமிக்கிறோனின் அரக்கத்தனமான வளர்ச்சியும், அழிவுகளும் உலக மக்களை மீளாத மரணபயத்துள் அடக்கும் நிலையைக் காண்கிறோம்.

இவற்றுக்கு மத்தியில் பிறந்துள்ள ஆங்கிலப் புதுவருடமும், தமிழர் எமது தைப்பொங்கல் விழாக்கால கொண்டாட்டங்களும், உங்களை இன்பக் கடலில் திளைக்க வைக்க வாழ்த்துகிறோம்.

இது தமிழரின் வருடத்தில் 9வது மாதமாக வரும் மார்கழி மாதமாகும். உலகின் அனைத்து மதவாதிகளும், மத வேறுபாடுகளற்றுக் கொண்டாடும் கிறிஸ்மஸ் நத்தார் கத்தோலிக்கர்களின் புது வருடப் பிறப்பு எனப் பல கொண்டாட்டங்களை, இந்த மாதம் உலக மக்களுக்கு வழங்கிப் பரவசப்படுத்துவதால், இந்த மார்கழி மாதம் உலக ஜீவராசிகளை எல்லாம் கூடிக் குலாவி, இன்பச் சுகத்தை உடல் மற்றும் உளரீதியாக தனது குளிர் மூலம் ஒட்டி உறவாடத் தூண்டுகிறது. முழுப் பூமிப் பந்தும் மழை, பனி மற்றும் குளிர் காற்றால் எல்லா உயிர்களும் அடுத்து வரப்போகும் பருவ கால மாற்றத்துக்காக ஏங்கித் தவம் இருக்கும் நிலையை ஏற்படுத்துகிறது.

தமிழ் மக்கள் சிவனின் மதமாகிய சைவ மதத்தில் பிரபஞ்சக் கூத்தனாக சிவனை வழிபடும் மார்கழித் திருவாதிரை நாள், அதிகாலையில் மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களை 21 நாட்கள் பாடிப் பரவசமாகி, தரிசனம் செய்வார்கள். இந்த அற்புதமான ஞான விளக்கப் பாடல்களை, சிறந்த தமிழ் மொழியில் தினமும் அதிகாலை நீராடி, சிவ தரிசனம் செய்வது, சைவ மக்களின் பாரம்பரிய வழிபட்டு மறையாகப் பேணப்பட்டு வருகிறது.

ஆன்மாக்கள் எல்லாம் கன்னிப் பெண்களாகவும், சிவபெருமான் கன்னிப் பெண்களை மணக்க வரும் மணமகனாகவும் பாவனை செய்து, அவருடைய பக்கதர்களைக் காதலிக்கும் வகையில் இத் திருவெம்பாவைப் பாடல்கள் உள்ளன.

அரன் எனும் சிவன் ஆண் தெய்வமாகவும், அவரது பெண் வடிவம் அரி எனப்படும் விஷ்ணுவாகவும், சிவனின் அரத்த நாரி வடிவம், அதாவது மாதொரு பாகன் என்கிற வடிவம் சிவனும், விஷ்ணுவும் இருவேறு கடவுளர் அல்ல, இருவரும் ஒருவரே என்றும், சைவ - வைணவ மதங்களின் சண்டைகளுக்கு முடிவைத் தேடும் முகமாக, சிவனை மோகினி வடிவில்

ஆண் பெண்ணாக உடல் உறவு கொண்டதால் அவதரித்த கடவுள்தான் ஐயப்ப சுவாமிகள் என்பது, சைவ வைணவ மதவாதிகளின் நிலைப்பாடு.

அந்த வகையில்தான் முன்னரே ஆண்டாளின் திருவாய் மொழியான திருப்பாவைப் பாடல்களின் தமிழ் மொழிச் சிறப்பையும், பக்தி வெள்ளத்தாலும் கவரப்பட்ட மணிவாசகப் பெருமான் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிச் சைவ மக்களைப் பக்தி வெள்ளத்திலும், இனிய தமிழிலும் நீராடிச் சிவனை வழிபட வகை செய்தார் என்பர் சிவ பக்தர்கள்.

ஆண்டாள் என்பது திருமழிசை ஆழ்வார்தான் என்கிற கருத்தும் உள்ளது. எது எப்படியாயினும், திருப்பதி வெங்கடேசரின் வீதி உலாவில் ஆண்டாளின் தமிழ்த் திருப்பாவைதான் பக்தர்களைப் பரவசப் படுத்துவதன் மூலம், ஆண்டாள் 'தமிழை ஆண்டாள்' என்கிற சொல்லாடல், அமரத்துவம் பெறுகிறது. பகவத் கீதையில் மாதங்களில் தானே மார்கழி என்பதால், மார்கழி மாதம் சைவ வைணவ பக்தர்களால் தமிழ் மணம் பொழியும் அதிசயத்தைக் காண்கிறோம்.

காதலன் ஒருவன் தன் காதலியை 'மாதங்களில் அவள் மார்கழி என்கிறான், மற்றொருவனோ, ' நீ பார்த்ததால் தானடி சூடானது மார்கழி என்கிறான். புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாத மழை, காற்று, பனியால் நடுங்கும் உலகத்திற்கு விடிவையும், விடுதலையையும் வரமாகத் தரும் மார்கழியை மனதாரப் போற்றி, நீராடி, ஆன்மீக தரிசனம் காண்போமாக!.

அகர தீபத்தின் ஆன்மீகச் சேவை மேலும் தேவைப்படும் இன்றைய உலகில், அத்தகைய தேவையை இந்த இதழும் உங்களுக்குத் தரும் என்கிற நம்பிக்கையுடன், இந்த இதழை வழங்குகிறோம். எமது நம்பிக்கை தவறாயின், அதனை எமக்குச் சுட்டிக் காட்டி நிறைவு செய்ய உங்களைப் பணிவுடன் கேட்டு விடை பெறும்,

**ஆசிரியர், அகர தீபம்.**




# அகர தீபம்

மாலை : 08 மலர் : 01

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany.

**00 49 176 47 11 87 11**

Email : akaratheepam@akaram.eu



**www.akaram.eu**

Germany, Switzerland, France
England, Denmark, Norway,
Holland, Sweden, Italy, Canada



© ETU e.V.2014 All rights reserved

# தாசிகுலப் பெண்ணான கண்டகி



கண்டகி என்னும் அழகான பெண்ணிடம் ஒரு விசித்திரமான குணம் இருந்தது. அது என்னவென்றால், தன்னை நாடி வரும் ஒவ்வொரு ஆணையும் தன் மணாளனாகவே பாவித்து, ஒரு தர்ம பத்தினியைப் போல் அவனிடம் நடந்து கொண்டு, அவனுடைய எல்லாத் தேவைகளையும் முழு மனத்துடன் செய்து வந்தாள். இதைப் பார்த்த ஊரார் அவளை எள்ளி நகையாடினர். இருந்தாலும் அவள் தன் குணத்தில் இருந்து மாறவில்லை.

ஒருநாள் ஒரு கட்டழகு வாலிபன் மாலைப் பொழுதில் அவளிடம் வந்து பொன்னும், மணியும் கொடுத்துவிட்டு அவளை ஏறிட்டுக் கூடப் பாராது சென்று விட்டான். வருந்திய கண்டகி செய்வதறியாது திகைக்க, அதே வாலிபன் அன்று நடுநிசியில் திரும்ப அவளிடம் வருகிறான். உற்சாகத்துடன் அவனை உபசரித்த கண்டகி, அன்றிரவு அவனைத் தன் பதியாக மனத்தால் வரித்து அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்ய முற்பட்டாள். அப்போது அவன் உடல் வியர்வையால் நனைந்திருப்பது கண்டு, நறுமணத்தைலம் தடவி அவனைக் குளிக்க ஆயத்தம் செய்ய எத்தனித்தவளுக்கு அவன் ஒரு குஷ்டரோகி எனத் தெரிய வருகிறது.



அதிர்ச்சி அடைந்தாலும் அவனைத் தன் பதியாக வரித்த காரணத்தால் வெறுக்காமல் அவனைத் தொட்டு வேண்டிய உதவிகள் செய்து, அவனுக்கு வேண்டிய சிசுருஷைகள் புரிந்தாள். உண்மை தெரிந்த அவள் வீட்டார், அவனை அப்போதே விலக்கச் சொல்ல, மறுத்தாள் கண்டகி. அன்றிரவை அவனுடன் கழிக்க, மறுநாள் பொழுது விடிகிறது. அவனை எழுப்புகிறாள் கண்டகி. வாலிபன் உயிரோடு இல்லை. இதைக் கண்டு வருந்திய கண்டகி, அவன் தன் பதி என்று சொல்லி, அவனுடைய இறுதிச் சடங்குக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டுப் பின் அந்நாளைய வழக்கப்படி தானும் அவனுடன் உடன்கட்டை ஏறுகிறாள்.

திகைத்த உறவினர் செய்வதறியாமல் விழிக்க, சிதைக்குத் தீ மூட்டும் நேரம் அற்புதம் நிகழ்கிறது. இறந்த வாலிபன் உடல் மறைய அங்கே சங்கு, சக்ர கதாபாணியான ஸ்ரீமந்நாராயாணன் காட்சி அளிக்கிறார். கண்டகி ஒவ்வோர் இரவிலும் ஒரு ஆணைத் தன் கணவனாக வரித்து வந்த போதிலும், அந்த ஆணுக்கு உண்மையான பத்தினியாக அவள் அனுஷ்டித்த பதிவிரதா தர்மத்தை உலகுக்கு எடுத்துக் காட்டவே இவ்வாறு நடந்ததாய் ஸ்ரீமந்நாராயணன் சொல்லிக்



கண்டகிக்கு மூன்று வரங்கள் அளிப்பதாய் சொல்கிறார்.

கண்டகி கேட்டதோ ஒரே ஒரு வரம் மட்டும் தான். அதுவும் எப்போதும் ஸ்ரீமந்நாராயணன் பக்கத்திலேயே தான் ஒரு தாயாகவும், பெருமாள் மகனாகவும் இருக்க வேண்டும் என்பது தான் அது. அப்போது ஸ்ரீமந்நாராயணன் சொல்கிறார் “ஒரு பக்தனின் சாபத்தால் தான் மலையாக மாறவேண்டி இருப்பதால், மலையோடு சார்ந்த நதியாகக் கண்டகி எப்போதும் தன்னுடன் இருக்கலாம்” என்று சொல்லுகிறார்.

சாபம் பெற்ற நாராயணன் மலையாக மாற, கண்டகி அதே பேரோடு நதியாக ஓடுகிறாள். ஒரு மாலைபோல் மலையைச் சுற்றிக் கொண்டு ஓடும் கண்டகியின் வயிற்றில்தான் சாளக்கிராம கற்கள் கிடைகின்றது.




ஆலயங்களுக்கான அறிவித்தல்!

‘அகரதீபம்’ இதழை பெற்றுக் கொள்வதற்கும், ஆலயங்களுக்கான விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

00 49 176 47 11 87 11

# வார்த்தைகளில் விஷம் கக்கும் ஒரே இனம் மனிதன்



பாரதப் போர் முடிந்ததும் திரௌபதிக்கு தனக்கு மிகவும் வயதானதைப் போல உணர்ந்தாள். உடல் ரீதியாக மற்றும் மன ரீதியாகவும் கூட அஸ்தினாபுரம் நகரைச் சுற்றி விதவைகள் அதிகமாக இருந்தனர். ஒரு சில ஆண்கள் மட்டுமே காணப்பட்டனர். அனாதைகள் அங்குமிங்கும் சுற்றித் திரிவதைக் கண்ட அவர்களின் அரசி திரௌபதி, அஸ்தினாபுரம் அரண்மனையில் அசையாமல் வெற்றிடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீ கிருஷ்ணர் அறைக்குள் நுழைய, திரௌபதி கிருஷ்ணரைப் பார்த்ததும் ஓடி வந்து அவரைச் சேவித்துக் கொண்டாள். கிருஷ்ணர் அவள் தலையைத் தடவிக் கொடுக்கிறார். அவளோ அழத் தொடங்கினாள். நேரம் மெல்ல நகருகிறது. அவளிடமிருந்து விலகி பக்கத்து படுக்கையில் உட்கார்ந்த கிருஷ்ணன் கேட்டார்.

“திரௌபதி, என்ன நடந்து விட்டது..?”

“ஒன்றும் நடக்கவில்லையே கிருஷ்ணா!”

கிருஷ்ணர் : “விதி மிகவும் கொடூரமானது பாஞ்சாலி..

நாம் நினைப்பது போல் வேலை செய்யாது! அது அதன் போக்கில் அதனுடைய செயல்களைச் செய்கிறது. முடிவுகளையும் மாற்றுகிறது. நீ பழிவாங்க நினைத்தாய்... வெற்றி பெற்றாய் திரௌபதி! உன் பழிவாங்கல் முடிந்தது...

துரியோதனனும், துச்சாதனனும் மட்டுமல்ல, கௌரவர்கள் அனைவரும்

மடிந்து விட்டனர். நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்!"

திரௌபதி : "சகோதரா, என் காயங்களை ஆற்ற வந்தீர்களா..? அல்லது அதன் மீது உப்புத் தூவ வந்தீர்களா?"

கிருஷ்ணர்: "இல்லை, திரௌபதி... உண்மை நிலையை உனக்கு உணர்த்தவே வந்துள்ளேன். எல்லாம் நமது தொலைநோக்குப் பார்வையற்ற செயல்களின் விளைவு என்பதை உணர்த்த வந்தேன்."

திரௌபதி: "அதனால் என்ன? இந்தப் போருக்கு நான்தான் முழுப் பொறுப்பா கிருஷ்ணா?"

கிருஷ்ணர்: "இல்லை திரௌபதி.. நீ மட்டுமே காரணம் என்று கருதாதே..! ஆனால், உன் செயல்களில் நீ கொஞ்சம் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்திருப்பாயேயானால், நீ இவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்க மாட்டாய்.."

திரௌபதி: "நான் என்ன செய்திருக்க முடியும் கிருஷ்ணா?"

கிருஷ்ணர் : "நீ நிறைய செய்திருக்க முடியும் பாஞ்சாலி. உனது சுயம்வரம் நடந்தபோது கர்ணனை அப்படி அவமானப்படுத்தாமல், போட்டியில் கலந்து கொள்ள அவருக்கும் வாய்ப்பளித்திருந்தால் ஒருவேளை முடிவு வேறு ஏதாவதாக இருந்திருக்கக் கூடும்!

அதற்குப் பிறகு குந்தி உன்னை ஐந்து கணவர்களுக்கு மனைவியாகும்படி கட்டளையிட்டதை... அப்போது ஏற்றுக் கொள்ளாதிருந்தாலும் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும்.

அதற்குப் பிறகு உன் அரண்மனையில் துரியோதனனை அவமானப்படுத்தினாய்... பார்வையற்றவரின் மகன்கள் குருடர்கள் என்று. அவ்வாறு நீ சொல்லாதிருந்திருந்தால், நீ மானபங்கப்பட்டிருக்க மாட்டாய்... அப்போதும், ஒருவேளை, சூழ்நிலைகள் வேறுவிதமாக இருந்திருக்கும்.

'நம் வார்த்தைகள் கூட விளைவுகளுக்குப் பொறுப்பு திரௌபதி...' நீ பேசுவதற்கு முன் உன் ஒவ்வொரு வார்த்தையையும் எடை போடுதல் மிகவும் முக்கியமானது.. இல்லையெனில் அதன் தீய விளைவுகள் உன்னை மட்டுமல்ல, உனது சுற்றுப்புறத்தையும் மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிடும்.."

பற்களில் விஷமில்லாமலேயே பேசும் வார்த்தைகளில் விஷம் கக்கும் ஒரே இனம் இவ்வுலகில் மனிதன் மட்டுமே..! எனவே, வார்த்தைகளைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள். அதாவது, யாருடைய மனதையும் புண்படுத்தாதீர்கள்.

ஏனென்றால் மகாபாரதம் நமக்குள் மறைந்திருக்கிறது.



# சிவ பூஜையில் கரடி

பூஜை மற்றும் சுப நிகழ்ச்சிகள் செய்யும் பொழுது இடையூறுகளோ அல்லது யாரேனும் வந்து விட்டாலோ அப்பொழுது சொல்கிற ஒரு பழமொழி 'சிவ பூஜையில் கரடி மாதிரி' எனச் சொல்வோம் அதன் அர்த்தம், முற்காலத்தில் ராஜ்யத்தை ஆளும் மன்னன் என்றாலும், அந்த ராஜ்யத்தைத் தந்த மன்னாதி மன்னன் சிவபெருமான். 'மக்களுக்கு செய்கின்ற நற்செயல் எல்லாம் மகேசனுக்கு செய்வதே!' என நன்கு உணந்தவர்கள். ஆதலால் அவர்கள் 'சிவ பூஜை' செய்து ஈசனை வழி பட்ட பின்னரே அரியணையில் ஏறுவார்கள்.

அப்படி சிவபூஜை செய்யும் பொழுது, ஏதேனும் தடங்களோ இடையூறோ ஏற்படாமல் இருக்க, அக்காலத்தில் கரடி வாத்தியம் வாசிக்க செய்வார்கள். பின்பு சிவபூஜையில் ஈடுபடுவார்கள். இதில் கரடி என்பது மிருகத்தை குறிக்காது. கரடி என்பது ஒரு வகை வாத்தியமாகும். ஆனால், பிற்காலத்தில் இதுவே பூஜைக்கு இடையூறு ஏற்படுவது போல அர்த்தம் மாறி விட்டது.

இன்றளவும் தடங்கல் ஏற்படும் போதெல்லாம் சிவ பூஜையில் கரடி போல மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மன்னனும் மாறிவிட்டான்,



சிவ பூஜையும் மறந்து போய் விட்டது, கரடி வாத்தியமும் மறைந்தே போய்விட்டது. மக்களும் நாகரீகமென மாறிவிட்டார்கள். ஆனால், எப்பவும் மாறாதவன் மகேசன் மட்டும்தான்.

அன்று மன்னன் உள்பட அனைவருக்குமே ஈசன் மீது மிகுந்த பற்று இருந்தது. மக்கள் சொல்வதை அரசன் கேட்டான், அரசன் சொல்வதை ஈசன் கேட்டான். இன்றோ ராஜாக்களின் கூஜாக்கள் கூட நேரமே இல்லையென்று வீணான வேலைகளில் கவனம் செலுத்துகிறார்கள்.

மக்களே நீங்கள் மகிழ்ச்சியாகவும், நலமாகவும், நிம்மதியாகவும் வாழ சிவ பூஜையே சிறந்த வழி. மகேசன் மனம் மகிழ்ந்தால், மக்களின் வாழ்வில் சர்வ நிச்சயமாக ஒளி பிறக்கும். நாம் சொல்வதை அரசன் கேட்கிறானோ, இல்லையோ நிச்சயம் மகேசன் கேட்பான். வாழ்க நமசிவாயம்! ஓம் நமசிவாய.. ஓம் நமசிவாய..



## சிறப்புமிக்க வரமே

# உடல்

உலகின் அனைத்து ரகசியமும் உன் உடலுக்கு உள்ளே..! மந்திரம் தேடாதே, ஒரு தந்திரமும் நாடாதே உன்னைத் தேடு..! ஊர் ஊராக சுற்றாதே உன் உடலைச் சுற்று..!

ஊர் உனக்கு மகுடம் சூட்டி உத்தமன் என பட்டம் தந்தாலும், உடல் உன்னை கை விட்டால், உன் பட்டமும் உன் பதவியும் பிடி சாம்பலாகிவிடும்..!

புறத்தில் உன் குடும்பத்தை நேசித்தாய், அது உன் குடும்பம் எனக் கண்டும் கொண்டாய்..! ஓடி ஓடி உழைத்தாய் உன் குடும்பத்திற்கு. காவல் தெய்வமாக நின்றாய்..! ஆனால், உனக்குக் காவல் தெய்வமாக, உன் உயிருக்கு காக்கும் கடவுளாக இருப்பது உன் உடலே...!

அகக் குடும்பத்தை மறந்து விடாதே.! உன் அக குடும்பம் உன் உடலே..! உன் அக குடும்பம் சரியில்லை என்றால், சூரிய குடும்பத்தில் நீ இருக்க இயலுவதில்லை..!

உன் உள் குடும்பம் உன் உடலே! அதை மறந்தால் உன் வெளி குடும்பம் கதறினாலும், உன்னை காக்கவும் யாரால் முடியும்..!

மற்ற உயிர்களுக்கு ஒருவன் செய்யும் பாவத்திற்கு விமோசனம் உண்டு..! ஒருவன் அவன் உடலுக்கே செய்யும் பாவத்திற்கு விமோசனம் இல்லை...! காரணம் அந்த உடல் அவன் உயிருக்காகவே சிறப்புமிக்க வரமாகக் கொடுக்கப்பட்டதால்..!

உடலுக்கு ஒருவன் செய்யும் தொண்டே பூஜை..! உடலுக்கு உள் சென்று உனக்காக உழைக்கும் உறுப்புகளை வணங்குவதே, ஆலயம் சென்று வணங்குவதை விட உயர்வானது..! உடல் அனுமதித்தால் தான் ஒருவன் சித்தனும் ஆக முடியும்..!

ஒருவன் எப்படி பட்டவனாக வேண்டும் என்று தீர்மானிப்பது அவனின் எண்ணங்களே..! ஆனால் அந்த எண்ணங்களை தீர்மானிப்பது உடலே..! ஒருவன் எதுவாக ஆக விரும்புகிறானோ அதை தீர்மாணிப்பதும் உடலே..! ஒருவன் உண்ணும் உணவும் பேணி காக்கும் உடலும் அழைத்து செல்லும் அதன் அதன் தன்மைக்கு ஏற்ப..!

ஒருவன் அவன் உள் குடும்பமான உடலை கவனித்தால்..! அந்த உள் குடும்பமே உன் வெளி குடும்பத்தை காக்கும்..! பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரவர் குலத்தின் குலதெய்வம் அவரின் உடலே..! உலகின் அனைத்து ரகசியமும் உன் உடலுக்கு உள்ளே..! அதைத் தேடு...!!

# சிவலிங்கம் பற்றி ஆராய்ச்சியில் கிடைத்த முடிவு

சிவலிங்கங்கள் பற்றிய டாக்டர் "விளாதி மீரின்" என்பவரின் ஆராய்ச்சி மிக வித்தியாசமானது. அது இந்தப் பூமியில் மொத்தம் எத்தனை லிங்கங்கள் உள்ளன? என்று எண்ணிப் பார்க்கவோ, இல்லை அவற்றின் பூர்வப் புராணக் கதைகளை அறியவோ முயலவில்லை. இவற்றுக்கப்பால் சிவலிங்கங்கள் பற்றி நாம் யோசிக்கவும், அதை நாம் நேசிக்கவும் நிறைய அடிப்படைகள் இருப்பதாக டாக்டர் விளாதிமீர் கருதினார். அதில் முதலாவது, ஸ்தூல வடிவங்களில் இறை உருவங்களை உருவாக்கி, வழிபாடு செய்யும் இந்து மதத்தில் ஒரு குழவிக் கல்லைப் போன்ற லிங்கம் என்னும் உருவமற்ற ஒரு உருவம் எப்படி உட்புகுந்தது என்பதுதான்.

உண்மையில் லிங்க சொரூபமானது மூன்று மதத்திற்கும், புத்த ஜைனர்களுக்கும் கூட பொதுவானது என்பதையும் அவர் கண்டுபிடித்தார். ஒரு மலை உச்சி! அதில் பௌர்ணமி இரவில், கரிய நிழல் உருவாய் கண்ணுக்குத் தெரிந்த லிங்க உருவத்தைச் சிலுவைச் சின்னமாகவும் பார்த்தார்கள். ஒரு இஸ்லாமியன் தங்களின் மசூதிக் கூரை தெரிவதாக கருதினார். புத்த ஜைன சன்யாசிகள் தங்கள் குருமகான்கள் அமர்ந்து தவம் செய்து கொண்டிருப்பதாகக் கருதினார்கள். ஒரு இந்துவோ அது 'சிவலிங்கம்' என்று திடமாகக் கருதி, இருந்த இடத்தில் இருந்தே வில்வ இலைகளை வாரி, வாரி அர்ச்சித்தான்.

"உருவம் ஒன்று. ஆனால், அனைத்து மார்க்க தரிசிகளையும் அது திருப்திப்படுத்தியது என்றால், சிவம்தான் முதலும், முடிவுமான அனைவருக்கும் பொதுவான இறை ஸ்வரூபமா?" டாக்டர் விளாதிமீர் இப்படிதான் கேட்கிறார்.



மேலும் அவர் புராணங்களிலும், இதிகாசங்களிலும் சிவம் பற்றி சொன்னதை, அவர் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. லிங்க உருவம் பற்றி யாரும் சரியாக உணரவில்லை என்பதுதான் அவரது கருத்து. ஒரு ரஷ்ய நாட்டுப் பிரஜையாக இருந்தாலும், சிவலிங்க சொரூபம் அவருக்குள் ஆழமான பாதிப்புகளை உருவாக்கியதாக அவர் கூறுகிறார்.

லிங்கம், சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் என்று கணித வடிவங்கள் அவ்வளவையும் தனக்குள் கொண்டிருப்பதாகவும், ஒவ்வொரு கோணத்தில் இருந்து பார்க்கும்போதும், ஒரு பொருள் தருவதாகவும் இருக்கிறது என்பது அவர் கருத்து. குறிப்பாக அணு தத்துவம் சிவலிங்க சொரூபத்துக்குள் விலாவரியாக இருக்கிறது. லிங்கத்தைப் பயன்படுத்தத் தெரிந்தால், அது மழை தரும், நெருப்புத் தரும், காற்று தரும் கேட்ட எல்லாம் தரும் என்றும் நம்புகிறார்.


அப்படி என்றால், சிவமாகிய லிங்க ஸ்வரூபம் என்பது மானுடர்கள் பயன்படுத்தத் தெரியாமல் வைத்திருக்கும் மகத்தான ஒரு எந்திரமா?

டாக்டர் விளாதிமீரின் சிவஸ்வரூப ஆராய்ச்சியில் ஒரு ஆச்சரியமூட்டும் தகவல் ஒன்றும் அவருக்குக் கிட்டியதாம். இந்த மண்ணில் பூமிக்கு மேலாக, கண்ணுக்குத் தெரியும் விதத்தில் உள்ள லிங்க ஸ்வரூபங்கள் இல்லாமல், பூமிக்குள் புதைந்து கிடக்கும் ஸ்வரூபங்களும் ஏராளமாம்! அதுவே அவ்வப்போது 'சுயம்பு மூர்த்தி'யாய் வெளிப்படுகிறதாம்.

சுயம்பு மூர்த்தங்களின் பின்புலத்தில் பஞ்சபூத சக்திகளின் இயக்கம் ஒரு சீராகவும், ஆச்சரியம் ஊட்டும் விதத்தில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த கூட்டுறவோடும் செயல்படுகிறதாம். சுருக்கமாகச் சொன்னால், அந்த மூர்த்தங்களைப் பஞ்ச பூதங்கள் ஆராதிக்கின்றன என்பதே உண்மை என்கிறார்.

இப்படிப்பட்ட ஆராதனைக்குறிய இடங்களில் கூர்ந்து கவனித்தபோது, பஞ்ச பூதங்களும் சம அளவிலும், அத்துடன் சீரான இயக்கத்துடனும் அவை இருக்கின்றன. மனித சரீரத்திலும் பஞ்ச பூதங்கள் உள்ளன. இவை சுயம்புலிங்க ஸ்தலங்களில் இயற்கையோடு கூடிச் செயல்படுகின்றன என்கிறார்.

அதாவது சுயம்பு மூர்த்தி உள்ள ஸ்தலங்களில் வாழும் மனிதர்களே, அந்த மண்ணுக்கான மழை. காற்று, அக்கினி, மண்வளம் ஆகியவைகளைத் தீர்மானிக்கிறார்கள் என்று கூறும் விளாதிமீர், மதுரை போன்ற சுயம்புலிங்க ஸ்தலங்களில் கூடுதலான மழை அல்லது குறைவான மழைக்கு





அங்கு வாழும் மக்களின் மனநிலையே காரணமாகிறது என்கிறார். சுயம்பு லிங்கங்கள் உள்ள மண்ணில் வாழும் மக்கள் மனது வைத்தால், அங்கே எதை வேண்டுமானாலும் உருவாக்கிட இயலும் என்றும் கூறுகிறார்!.

இந்த பூமியானது சூரியன் உதிர்ந்த ஒரு சிறிய அக்னித் துளி என்கிறது விஞ்ஞானம். மெல்லக் குளிர்ந்த இதில் அடுக்கடுக்காய் உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தன. அந்த உயிரினங்கள் உயிர் வாழத் தேவையான அனைத்தும் கூட அப்போது தோன்றின. இதுதான் பல கோடி ஆண்டுகளைக் கண்டு விட்ட இந்த பூமியின் சுருக்கமான வரலாறு.

மாற்றம் என்பதே இந்தப் பூமியில் மாறாத ஒன்றாக என்றும் இருப்பது. அந்த மாற்றங்களால் வந்ததே இந்த மனித சமூகம். கூன் விழுந்த, கொத்துக் கொத்தான முடி கொண்ட ஏழு, எட்டு அடிக்குக் குறையாத உயரம் கொண்ட குறைந்த பட்சம் 150 கிலோ எடையுடன் தொடங்கியதுதான் சராசரி மனிதனின் உடலமைப்பு.

இன்று அவன் சராசரியாக ஐந்தரை அடி உயரம், எண்பது கிலோ எடை, நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை என்று மாறியிருக்கிறான். பல ஆயிரம் ஆண்டுகளாக இந்நிலையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. ஆனாலும், காலப்போக்கில் இவன் மேலும் குட்டியாகி, சுண்டிச் சுருங்கி வினோதமான முக அமைப்பை எல்லாம் பெற்று, ஒரு பெருச்சாளி போல் நிலப்பரப்பைக் குடைந்து, அதனுள் ஊர்ந்து சென்று பதுங்கி வாழும் காலம் வரலாம் என்பதெல்லாம் விஞ்ஞான அனுமானங்கள். இந்தப் பூமியில் கிடைக்கும் பலவித ஆதாரங்களும், மனித மனத்தின் ஊகம் செய்து பார்க்கும் சக்தியுமே!

இதன் நடுவே மிக மாறுபட்ட கருத்துகளுடன், நமக்கிருக்கும் அறிவாற்றலால் நம்பமுடியவில்லை என்று ஒரு வார்த்தையில் கூறும் விதமாய் இருப்பதே மதப் புராணங்கள். இதில் புராணவழி அறியப்பட்ட சிவமானது தனித்து நிற்கிறது. புராணம், விஞ்ஞானம் இரண்டையும் கடந்து மூன்றாவதாய் ஒன்றும் உள்ளது. அதுதான் நான்! ‘மானுடமே முடிந்தால் என்னைப் புரிந்துகொள்’ என்பதுபோல் இருக்கிறது அது என்கிறார் டாக்டர் விளாதிமீர்!

இந்தப் பூவுலகில் சிவம் தொடர்பான அடையாளக் குறியீடுகள், பாரத மண்ணில் மட்டுமன்றி ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் கூட இருக்கிறது என்பது டாக்டர் விளாதிமீரின் கருத்து. அமெரிக்காவில் “கிராண்ட் கன்யான்” என்னும் வித்தியாசமான மலைப்

பகுதியில் பராசக்தியின் அம்சங்கள் என்று வர்ணிக்கப்படும் "சிவம், விஷ்ணு, பிரம்மன்" மூன்றின் அடையாள உருவங்கள் காணப்படுகின்றனவாம். ஆயினும் இந்திய மண்ணில் மட்டும் சிவம் தொடர்பான சிந்தனைகளும், சைவம் என்கிற ஒரு பிரிவும் உருவாக ஆழமான ஒரு காரணம் இருப்பதாக விளாதிமீர் கருதுகிறார்.

உலகின் உயர்ந்த சிகரமான இமயம் பூகோள ரீதியில் பூமியின் மையத்தில் (கிட்டதட்ட) காணப்படுகிறது. அதன்படி பார்த்தால் இந்த உலகே கூட சிவலிங்க சொரூபம் எனலாம். ஒரு வட்டத்தில் இருந்து கூம்பு முளைத்தது போல், உலகமே ஆவுடையராகத் திகழ இமயம் சிவஸ்தம்பமாக எழும்பி நிற்கிறது.

அங்கே பஞ்ச பூத ஆராதனையாக குளிர்ந்த காற்றும், உறைந்த பனியே நீராகவும், அதன் முற்றிய குணமே நெருப்பாகவும் இருக்கிறது. ஈர்ப்பு விசைக்கு உட்பட்ட வெளி வேறு எங்கும் காணப்படாத விதத்தில், தூயதாக எல்லாவித கதிர் வீச்சுக்களையும் காணப்படாததாகக் திகழ்கிறது.

இங்கே உயிராகிய ஜீவன் மிகச் சுலபமாக சிவத்தை அடைந்து விட அல்லது உணர்ந்து விட ஏதுவாகிறது. அதனாலேயே இங்கே ஞானியர் கூட்டம் அதிகம் இருக்கிறது என்பதும் அவரது கருத்து! இந்த ரஷ்ய விஞ்ஞானி சொன்ன விஷயங்கள் எதுவும், எந்த விஞ்ஞானியும் மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

## முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சிறப்புகள்



வள்ளி வலது பக்கம். தெய்வானை இடது பக்கம். வள்ளி இச்சா சக்தியையும், தெய்வானை கிரியா சக்தியையும், முருகன் ஞான சக்தியையும் குறிப்பவர்கள். வள்ளி இகலோகத்திலும், தெய்வானை பரலோகத்திலும் நம்மை காப்பவர்களாம். வள்ளியுடைய கையில் பூலோகத்தில் காணப்படும் தாமரை மலரும். தெய்வானை கையில் தேவலோகத்தில் காணப்படும் நீலோத்பல மலரும் இருக்கும்.

முருகனின் வலது கண்ணை சூரியனாகவும், இடது கண்ணை சந்திரனாகவும் சொல்வார்கள். அவனுக்குத் தந்தையைப் போன்ற அக்கினிக் கண்ணும் உண்டு. வலது புறம் இருக்கும் வள்ளியின் கையில் இருக்கும் தாமரை மலர், குமரனின் வலது கண் பார்வை (சூரியன்) பட்டு எப்போதும் மலர்ந்தே இருக்குமாம். அதே போல, இடது புறம் இருக்கும் தெய்வானையின் கையில் இருக்கும் நீலோத்பல மலரும், முருகனின் இடக் கண் பார்வையினால் (சந்திரன்) எப்போதும் மலர்ந்தே இருக்குமாம். அதனால் முருகப் பெருமானை இடைவிடாது அன்புடன் வணங்குபவர்களுக்கு எந்நேரமும் அகலாத துணையாய் அவன் இருப்பான்.



# கார்த்திகை விரதம்

கார்த்திகை விரதம், முருகனை வளர்த்த கார்த்திகைப் பெண்களை நினைத்து நன்றி செலுத்தும் விதமாக ஏற்படுத்தப்பட்ட ஒன்று என கூறுவர். கார்த்திகை நட்சத்திரத்தன்று அனுஷ்டிக்கப் படுவது நட்சத்திர விரதம். சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளில் இருந்து தோன்றிய முருகப் பெருமானை, சரவணப் பொய்கையில் இருந்து எடுத்து வளர்த்த கார்த்திகைப் பெண்களுக்குச் சிறப்பு சேர்க்கும் விதமாக, சிவபெருமான் அவர்களுக்கு ஒரு வரம் அளித்தார்.

கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதம் இருந்து முருகப் பெருமானை வழிபடுபவர்கள் நிறைவான அறிவு, நிலையான செல்வம், நீண்ட ஆயுள், அன்பும், பண்பும் நிறைந்த வாழ்க்கைத்துணை, நல்ல குணமுள்ள குழந்தைகள் ஆகிய பேறுகளைப் பெற்று சிறப்புற வாழலாம்.

கந்தன் அப்பெண்களின் பெயரால், "கார்த்திகேயன்" என அழைக்கப்படுகிறான். மேலும் ஒரு தகவல் உண்டு. சூரபத்மனை அழிக்க வேண்டி தேவர்கள் விரதமிருந்து ஈசனைத் துதித்தனர். ஈசன் தமது நெற்றிக் கண்ணைத் திறக்க, அதிலிருந்து ஒளிவடிவில் ஆறு நெருப்புப் பொறிகள் தோன்றி குழந்தையாய் உருமாறியது. அவ்வாறு ஆறுமுகன் அவதரித்த தினமே திருக்கார்த்திகை தினம். இது தவிர இறைவன் திரிபுர சம்ஹாரம் செய்த தினம் கார்த்திகை தினம் என்றும் ஒரு கருத்துண்டு. இக்கார்த்திகை தினத்தில் விரதம் இருப்பவர்களுக்குக் குறைகள் நீங்கி, நல்வாழ்வும், முக்தியும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

"நுந்தம் பகலிடை இன்னவன் நோன்றாள் வழிபடுவோர்

தந்தம் குறை முடித்துப் பரந்தனை நல்குவம் என்றான்"

தைமாதக் கார்த்திகையை விட, ஆடிக் கார்த்திகையே சிறப்பாகச் சொல்லப் படுகிறது. ஆடி மாதத்தில் தொடங்கி, ஆறு மாதங்கள் கார்த்திகை விரதம் இருந்து, தை மாதக் கார்த்திகையில் விரதத்தை முடித்தல் சிறப்பு. முருகப்பெருமானுடைய விரதங்களுள் முக்கியமானது கார்த்திகை விரதம்.



# ஏகாதசி நாளில் விரதம்



காதசி நாளில் விரதம் இருந்து, ஒருபொழுது மட்டும் சாப்பிட்டு, நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலான பாடல்களைப் பாடி, துளசி தீர்த்தம் பருகி, மகாவிஷ்ணுவை ஆராதிப்பது மிகுந்த பலன்களை வாரி வழங்கும் என்பது ஐதீகம்.

பொதுவாகவே மாதந்தோறும் வரும் ஏகாதசியும், விரதத்துக்குக்குரிய அற்புதமான நாள்தான். நிறைய பக்தர்கள் மாத ஏகாதசியில், மாதம் தவறாமல் விரதம் மேற்கொண்டு, பெருமாளை சேவிப்பதுண்டு.

ஏகாதசி நாளில் விரதம் இருந்து, ஒருபொழுது மட்டும் சாப்பிட்டு, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முதலான பாடல்களைப் பாடி, துளசி தீர்த்தம் பருகி, மகாவிஷ்ணுவை ஆராதிப்பது மிகுந்த பலன்களை வாரி வழங்கும் என்பது ஐதீகம்.

அருகில் உள்ள பெருமாள் கோயிலுக்குச் சென்று, பெருமாளுக்குத் துளசி மாலை சார்த்தி, வேண்டிக் கொண்டால், மனதில் உள்ள குழப்பங்கள் யாவும் விலகும். மனக்கிலேசம் நீங்கும். புத்தியில் தெளிவும், காரியத்தில் வெற்றியும் உண்டாகும்.

# யானையிடம் ஆசீர்வாதம் தெய்வீக ரகசியம்!



தினமும் மூலிகை தாவரங்களை மட்டும் உண்டு, மிருகங்களில் பலமுள்ளதாக திகழும் உயிரினம் யானை! மகத்தான தெய்வீக அம்சங்கள் பொருந்தியது. உலகில் வாழும் உயிரினங்களில் இரண்டு நாசித் துவாரங்கள் வழியாகவும் ஒரே நேரத்தில் சுவாசிக்கும் தன்மை யானைக்கு மட்டுமே உண்டு.

மனிதர்களாகிய நமக்கு கூட தினமும் 24 நிமிடங்களுக்கு ஒருமுறை நம்முடைய சுவாசமும் ஒரு நாசித் துவாரத்திலிருந்து இன்னொரு நாசி துவாரத்தில் மாறிக்கொண்டே இருக்கும். சுவாசத்தை கட்டுப்படுத்தும் மற்றும் முறைப்படுத்தும் ஆன்மீக முயற்சிகளுக்கு ‘சரகலை’ என்று பெயர்.

பிராணயாமம், வாசியோகம் போன்றவைகளும் நமது சுவாசத்தைத் தெய்வீகத் தன்மைக்கு முன்னேற்றம் அடைய வைக்கும் ஆன்மீக பயிற்சி முறைகளாகும். வாசியோகம் அல்லது பிராணாயாமத்தில் குறிப்பிட்ட நிலையை எட்டியவர்கள், எப்போதும் இரண்டு நாசித் துவாரங்கள் வழியாகவும் சுவாசிக்கும் திறமையைப் பெற்று விடுவார்கள். இதற்கு ‘சுழுமுனை வாசியோகம்’ என்று பெயர்.

இயற்கையாகவே சுழுமுனை வாசியோகம் உள்ள யானை, அதன் தும்பிக்கையை நம் தலையில் வைத்து ஆசீர்வாதம் செய்வதால், நமக்கு மகாலட்சுமியின் ஆசீர்வாதம் கிடைக்கிறது என்பதுதான் இதன் பின்னணியில் உள்ள தெய்வீக ரகசியம்.



# நாகலிங்கப்பூ விசேஷங்கள்

நாகலிங்கப்பூ இதுவே கடவுள். இந்தப் பூவுக்குள்ளே தானே இறங்கி வந்து குடியிருக்கிறான். அத்தகைய ஒரு பெருமைக்குரிய மலர்தான் நாகலிங்கப்பூ.

நாகமுமிருக்கிறது, உள்ளே லிங்கமும் இருக்கிறது. சுற்றிலும் தேவர்களும் இருக்கிறார்கள். தேவ கணங்களும் இருக்கின்றன. உள்ளங்கையில் வைத்துக் கொண்டு உற்று கவனித்தால் கைலாயமே கைக்குள் இருப்பது போல் இருக்கும். ஒரு சில நிமிடங்கள் நம் கவனத்தை ஒழுங்குபடுத்தி, இந்தப் பூவின் மத்தியப் பகுதியில் இருக்கும் சிவலிங்கத்தை உற்று நோக்கி, அப்படியே நம்மை தியானத்தில் கொண்டு சென்று விட்டால் உடல் சிலிர்க்கும். உள்ளம் அமைதி பெறும். கயிலாயம் கண்ணுக்குள் விரியும்.

சிவபூஜைக்கு உரிய அஷ்ட மலர்களில் இது இடம் பெற வில்லை. பூமிக்கு வந்த ‘சிவ மலர்’ என்பதாலோ என்னமோ, விசேஷமான நாகாபரணத்துடன் கூடிய சிவலிங்க வடிவத்தைப் பெற்றுள்ளது. பாம்புகள் விரும்பி தஞ்சம் புகும் மரமாக நாகலிங்க மரம் உள்ளது. விசேஷத்திலும் விசேஷமாக, மரத்தில் பூக்கும் பூவாக வேர்ப் பகுதிக்கு சற்று மேலே கொத்துக் கொத்தாக இலைகளைக் கொண்ட கிளைகளில் பூக்காமல், தனக்கென்று தான் பூப்பதற்கு என்று பிரத்யேகமாக ஒரு



கிளையை உருவாக்கிக் கொண்டு பூக்கும் மலராக நாகலிங்கப்பூ உள்ளது.

நாகலிங்க மரத்திற்கு ஏனைய தாவரங்களைப் போல பருவகால மாற்றங்கள் கிடையாதாம். என்றும் பசுமையான மரம் என்று போற்றப்படுகிறது. ஒரு நாகலிங்க மரத்தில் ஒரே நாளில் ஆயிரம் மலர்கள் வரை பூக்குமாம்.

நாகலிங்கப் பழம் மகா விசேஷம். ஒவ்வொரு பழமும் ஒரு கால்பந்து அளவுக்கு இருக்கும். அதில் 65 முதல் 550 விதைகள் வரை இருக்கும். இவைகள் முதிர்ச்சி அடைய சுமார் 12லிருந்து 18 மாதங்கள் வரை ஆகுமாம். அமேசான் காட்டுப் பகுதிகளில் இந்த மரம், துர்தேவதைகளிலிருந்து காக்கும் மரமாகவும், ஆசிய கண்டத்தில் செல்வத்தின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. மேலும் இந்த மரம் மாசுக் கட்டுப்பாட்டின் தன்மையைக் காட்டும் குறியீட்டுக் கருவியாகவும் கருதப்படுகிறது. காற்றில் அதிகமான சல்பர் இருந்தால், இதன் இலைகளை உதிர்த்து வெளிப்படுத்துமாம்.

கடன் நீக்கி வல்லமை தரும் இந்த மரத்தின் இலைகளை அரைத்து, தோல் நோய்களுக்கு மருந்தாகவும், இலைகளை மென்று தின்பதால், பல் வலிக்கு மருந்தாகவும், பட்டைகளையும், காய்களையும் பக்குவப்படுத்தி விஷ ஜுரத்துக்கு மருந்தாகவும் பயன்படுத்தலாம் என்கிறது சித்த மருத்துவம்.

# மார்கழியில் ஏன் திருமணம் செய்யக் கூடாது



மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி, ஆருத்ரா தரிசனம் என இறைவனை அடையக் கூடிய இரு பெரிய விழாக்கள் வருகின்றன. மார்கழி மாதம் என்றால் அது பீடை மாதம் என பலர் சொல்வதுண்டு. ஆனால் அப்படி அல்ல அது ஒரு தெய்வீகமான மாதமாகும். அதனால் தான் பகவான் கிருஷ்ணர் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கின்றேன் என கூறியுள்ளார். மாதங்களில் உயர்ந்த மாதம் மார்கழி. இந்த மாதத்தில் எவ்வளவோ சிறப்புகள் உண்டு. பொதுவாக இந்த மாதத்தில் விதை விதைக்கக் கூடாது என்பார்கள். ஏனெனில் இது விதை விதைப்பதற்கான காலம் அல்ல. விதை வளர்வதற்கான காலம்.

இந்த மாதத்தில் விதைத்தால், விதை சரியான உயிர் தன்மையற்று வளராமல் போய்விடும் என்ற காரணத்திற்காகத் தான் மார்கழி மாதத்தில் திருமணம் செய்யக் கூடாது எனச் சொல்கின்றனர்.

ஆடி மாதம் போல, மார்கழி மாதம் இறைவனுக்குரிய மாதம். இறைவனை வணங்க வேண்டிய மிக அற்புத மாதம் என்பதால் திருமணம் செய்யப் படுவதில்லை.

# பிரம்ம முகூர்த்தம்...



எந்த நல்ல காரியம் பண்ணினாலும் பிரம்ம முகூர்த்தத்தில் பண்ணினால் அது ஜெயமாகும். நல்லபடியா நடக்கும். குறிப்பாகக் கல்யாணம் போன்ற வாழ்வியல் நிகழ்ச்சிகளைச் செய்கின்ற பொழுது பிரம்ம முகூர்த்தத்தில் செய்தால் வாழ்க்கை செழிக்கும். அந்தச் சமயத்தில் செய்கின்ற எல்லா காரியங்களும் நன்மையில் முடியும் என்று சொல்வார்கள்.

பிரம்ம முகூர்த்தம் என்பது அதிகாலை 4 மணி முதல் 6 வரை. பெரியவர்கள் வீட்டில் 'அதிகாலை எழுந்திரு. அப்ப தான் அன்றைய நாள் உருப்படும்' என்று சொல்வார்களே, அது வெறும் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று நினைக்கிறீங்களா? அவர்கள் சொல்வதற்குப் பின்னால் சில ஆன்மீகக் காரணங்களும் உண்டு. அதைப் பற்றி விளக்கமாக பார்க்கலாம்.

**அதிகாலை எழுதல்...**

அதிகாலையில் தூங்கி எழுந்திருக்கும் பொழுது, சூரியனிடம் இருந்து பூமிக்கு வந்து சேருகின்ற சூரியக் கதிர்கள் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். அந்த கதிர்கள் நம்முடைய உடலில் படும்போது நரம்புகள் புத்துணர்ச்சி அடையும். கண்களுக்கும் தெளிவு கிடைக்கும். அதனால் தான் அதிகாலையில் எழுந்து சூரிய நமஸ்காரம் செய்யச் சொல்கிறார்கள்.

**சனிக்கிழமைகளில்...**

சனிக்கிழமையன்று அதிகாலை நேரத்தில்தான் சனி பகவானுடைய கிரகண சக்தி அதிக பலம் பெற்றிருக்குமாம். அதனால் தான் பெரியவர்கள் சனிக்கிழமைகளில் தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் சொல்கிறார்கள்.

**வேதங்கள்...**

ரிக் வேதத்தில் 'உஷஸ்' என்னும் பெண் தெய்வம் இருக்கிறது. பொதுவாக இந்த பெண் தோன்றிய பிறகுதான் தினமும் சூரிய உதயம் நடக்குமாம். அதனால் தான் அதிகாலைப் பொழுதை 'உஷத் காலம்' என்று அழைக்கப் படுகிறது. இந்த தேவதையினுடைய செழிப்பான கதிர்வீச்சுக்கள் பூமியை வந்தடைகிற அதிகாலை நேரத்தில் அதனால் தான்

குளித்து உடலையும், மனதையும் தூய்மையாக வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எப்போது ஆரம்பமாகும்?**

சூரியன் பூமியில் உதிப்பதற்கு முன்பாக 48 நிமிடங்களுக்கு முன்பான நேரம்தான் பிரம்ம முகூர்த்த நேரம் என்று சொல்லப்படுகிறது. 'பிரம்ம முகூர்த்தம்' என்பது படைக்கும் கடவுளான பிரம்மனைக் குறிக்கிறது. பிரம்மன் தான் நம்முடைய நாக்கினில் சரஸ்வதியை அமர வைத்து, 64 கலைகளையும் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்.

**திருமணம் கிரகப்பிரவேசம்..**

எந்தெந்த காரியங்களைப் பிரம்ம முகூர்த்தத்தில் செய்யலாம்? என்ற சந்தேகம் எல்லோருக்கும் இருக்கும். எந்த காரியமாக இருந்தாலும் பிரம்ம முகூர்த்தத்தில் செய்யலாம். குறிப்பாக திருமணம் மற்றும் வீடு கிரகப் பிரவேசம் ஆகியவற்றைப் பிரம்ம முகூர்த்தத்தில் செய்வது மிகவும் நன்மை தரும்.

**ஏன் இந்தப் பெயர்...**

பொதுவாக இரவில் உறங்கும் உயிர்கள், அடுத்த நாள் காலையில் உயிர்ப்பித்து தூங்கி எழுந்து இயங்குதல்தான் சிருஷ்டி படைத்தல் என்பார். இந்தப் படைத்தலைச் செய்வது பிரம்மன் என்பதால்தான் அதிகாலை நேரத்தை பிரம்ம முகூர்த்தம் என்று அழைக்கிறார்கள்.

# முருகப்பெருமானின் அருள் பெற உதவும் சஷ்டி விரதம்

முருகன் அருள் வேண்டி பக்தர்கள் இருக்கும் விரதங்களுள் மிகச்சிறப்புடையது சஷ்டி விரதம். இந்த விரதத்தை மனதில் கொண்டே 'சஷ்டியிலிருந்தால் அகப்பையில் வரும்' என்ற பழமொழி எழுந்தது. திருமணம் இல்லாமல் ஒருவருக்கு வாழ்க்கை முழுமையடையாது என்பது போல, குழந்தை இல்லாமல் திருமண வாழ்க்கை நிறைவு பெறாது. சஷ்டி விரதம் இருந்தால் நல்ல குழந்தைப்பேறு கிடைக்கும் என்பது பொருள். சஷ்டி விரதம் இருந்தால், நம் உள்ளத்தில் இறைவன் குடி கொள்வான் என்ற பொருளும் உண்டு.

சஷ்டி விரதத்திற்கு அத்தகைய வலிமை உண்டு. சஷ்டி விரதம் என்பது மிகப்பெரிய விரதம். திதிகளின் வரிசையில் சஷ்டி ஆறாவதாக வருவதால், அதற்கு மிகப்பெரிய வலிமை உண்டு. ஐஸ்வரியத்தைத் தரக்கூடியது. 6 என்ற வழக்கு ஜோதிடத்தில் உள்ளது. ஜோதிடத்தில் 6-ம் எண்ணுக்கு உரிய கிரகம் சுக்கிரன். இவர் லட்சுமியின் அம்சமாக கருதப்படுகிறார்.



திருமணம், வாகனம், வீடு ஆகியவற்றை தரக்கூடியவரும் சுக்கிரன்தான். எனவே, சஷ்டி திதியில் விரதம் இருந்தால், வேண்டிய அனைத்தையும் பெறலாம். 16 பேறுகளில் ஒன்றாகவே குழந்தைப்பேறு கருதப்படுகிறது. எனவே, குழந்தைப் பேறுடன் மீதமுள்ள 15 பேறுகளையும் அளிக்கும் வல்லமை சஷ்டி விரதத்திற்கு உண்டு.இதன் காரணமாக குழந்தைப்பேறு இல்லாதவர்கள் மட்டுமே சஷ்டி விரதம் மேற்கொள்ள வேண்டும் எனக்கூறுவது தவறு. சஷ்டி விரத நாட்களில் சிரத்தையாக இருந்து, விரதம் மேற்கொள்பவர்கள் யாராக இருந்தாலும் அனைத்து சிறப்பையும் பெற முடியும்.

சஷ்டி திதியில் வேலைக்கு சேருதல், வீடு வாகனம் வாங்குதல், மருத்துவ தொழில் தொடங்குதல் போன்றவை செய்ய உகந்த நாளாகும். சஷ்டியில் விரதம் இருந்தால் முருகனின் அருளை பெற்று வாழ்வில் அனைத்து செல்வ வளமும் பெறலாம்.

# ஊழ்வினை வலியது



நாம் யாருக்கும் எந்த தீங்கும் செய்யவில்லை. பின், நமக்கு ஏன் இந்த கஷ்டத்தை ஆண்டவன் கொடுக்கிறான்? என்ற சந்தேகம், நம்மில் பலருக்கும் ஏற்படும். ஏனெனில், செய்தத் தவறை நியாயப்படுத்துவது, மனிதனின் பிறவி குணம். ஆனால், இறைவன் அப்படிபட்டவன் அல்ல. செய்த தவறுக்கு, தண்டனை வழங்குவதில் அவன்தான் சரியான நீதிபதி. இதற்கு, மஹாபாரதத்திலேயே உதாரணம் இருக்கிறது.

குருக்ஷேத்திரம் யுத்தம் முடிந்துவிட்டது. ஹஸ்தினாபுரத்து அரசனாக, தருமன் முடிசூட்டிக் கொண்டு விட்டான். பாண்டவர்களின் வம்சத்தையே அழிக்க முயன்றதால், மன நிம்மதியின்றி, துரோணரின் மகன், அஸ்வத்தாமன் அலைந்து கொண்டிருந்தான்.


அவன் மனதில் ஒரு சந்தேகம் ஆட்டிப்படைத்தது. 'என் தந்தை சத்தியவான்; செஞ்சோற்று கடன் தீர்ப்பதற்காகவே, துரியோதனனுக்கு ஆதரவாக போர் புரிந்தார். ஆனால், அவரை பாண்டவர்கள், நான் இறந்ததாகப் பொய் சொல்லி, அநியாயமாக கொன்று விட்டனர். என் தந்தை செய்த தவறு என்ன?' என, மனதுக்குள்ளேயே புலம்பிக் கொண்டிருந்தான்.

ஒருநாள், கிருஷ்ண பரமாத்மாவை சந்தித்தான். கிருஷ்ணன் மீது அவனுக்கு கோபம் இருந்தது. அதனால், அவனிடமே தன் மனதில் இருந்த சந்தேகத்தை கேட்டான். 'என் தந்தையை பாண்டவர்கள் அநியாயமாக கொன்றதற்கு நீதானே காரணம். அவர் செய்த தவறு என்ன?' என கேட்டான்.

கிருஷ்ணன் சிரித்து விட்டு, 'செய்த பாவத்துக்கு யாராக இருந்தாலும், தண்டனையை அனுபவித்து தான் ஆக வேண்டும்' என்றான்.

'அப்படி என்ன என் தந்தை பாவம் செய்து விட்டார்?' கேட்டான் அஸ்வத்தாமன்.

கிருஷ்ணன் மீண்டும் சிரித்தான். "உன் தந்தை, அனைத்து அஸ்திரங்களையும் கற்றவர். ஆனால், ஏழையாக இருந்தார். அவரை கவுரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் குருவாக, பீஷ்மர் நியமித்தார். அதன் பின்தான், அவரது வாழ்க்கையில் வளம் ஏற்பட்டது. கவுரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் சகல வில்வித்தை உட்பட அனைத்தையும் கற்றுக் கொடுத்தார் உன் தந்தை. ஒருநாள் அவரை ஏகலைவன் என்ற வேடுவர்



இனத்தைச் சேர்ந்த சிறுவன் சந்தித்தான். 'எனக்கும் வில்வித்தை கற்றுக் கொடுங்கள்' என, உன் தந்தையிடம் கேட்டான்.

அரச குமாரர்களுக்குச் சொல்லி தருவதால் ஏகலைவனுக்கு கற்று தர, துரோணர் மறுத்துவிட்டான். ஆனால், ஏகலைவன் உன் தந்தையைப் போல் மண்ணில் சிலை செய்து, குருவாக வழிபட்டு, வில்வித்தையைத் தானாக கற்றுக் கொண்டான். சில ஆண்டுகளுக்கு பின், ஒரு சந்தர்ப்பத்தில், ஏகலைவனின் வில் வித்தை திறமை, அர்ஜுனனுக்கு தெரிந்தது. அவன், துரோணரிடம் கோபம் அடைந்தான். ஏகலைவன் தானே கற்றுக் கொண்டதை அர்ஜுனனிடம் தெரிவித்து, அவனை உன் தந்தை சமாதானப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், என்ன செய்தார்?. வில் வித்தைக்கு மிகவும் தேவையான, கட்டை விரலை, குரு காணிக்கையாக ஏகலைவனிடம் உன் தந்தை கேட்டார். அவனும், மகிழ்ச்சியாக கொடுத்து, குரு பக்திக்கு நீங்காத புகழை பெற்றார். அரண்மனை பணி போய்விடும் என்ற சுயநலத்தில் உன் தந்தை, சுயநலமாக நடந்து கொண்டு, ஒரு வேடனின் திறமையைப் பாழடித்தார். ஏகலைவனுக்கு பெருமை கிடைத்தாலும், அவனது எதிர்காலம் வீணானதுக்கு, உன் தந்தை தான் காரணம்.

இந்த பாவம் தான், உன் தந்தையை, போர்களத்தில், மகன் இறந்ததாக எண்ணி ஏற்பட்ட சோகத்தில் மரணமடைய வைத்தது. துரோணர், தியானத்தில் இருந்த போது, அவரை திரவ்பதியின் சகோதரன் அநியாயமாக கொலை செய்தான். அதைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததால், பாண்டவர்கள், தங்களின் வாரிசுகளை இழந்தனர்" என்று கூறி நிறுத்தினான் கிருஷ்ணன்.

உண்மைதான் என ஒப்புக் கொண்ட அஸ்வத்தாமன், 'நீ நினைத்திருந்தால், இந்த யுத்தம் நடக்காமல் தடுத்திருக்கலாம். ஆனால் ஒரு வம்சமே அழிவதை வேடிக்கை பார்த்தாய். உனக்கு தண்டனை கிடையாதா?' என, கேட்டான் அஸ்வத்தாமன்.

'ஏன் இல்லை. ஒரு வம்சம் அழிவதற்குக் காரணமாக இருந்ததால், என் வம்சம் அழிவதைப் பார்த்த பின் தான் எனக்கு மரணம் ஏற்படும்' என்றான் கிருஷ்ணன்.

உண்மைதான், யாதவ வம்சம் அழிந்து, காட்டில் தனிமையில் தியானத்தில் அமர்ந்திருந்த போது, மான் என நினைத்து வேடன் எய்த அம்பால் கிருஷ்ணனின் உயிர் பிரிந்தது. செய்த தவறுக்கு, தெய்வமாக இருந்தாலும் தண்டனை அனுபவிக்கதான் வேண்டும். ஆம், உப்பு தின்னவன், தண்ணீர் குடித்து தான் ஆகனும்..

நெருப்பு துண்டை முழுங்கியவன் கரித்துண்டை துப்பித்தான் தீர வேண்டும்.. ஊழ்வினை வலியது..

# சிறப்பு வாய்ந்த பங்குனி உத்திரம்

பிரம்மன், தன் மனைவி சரஸ்வதியை நாக்கிலேயே வைத்துக் கொள்ளும்படியான வரத்தைப் பெற்றார். தன் மனைவி இந்திராணியைப் பிரிந்திருந்த இந்திரன், மீண்டும் அவளுடன் சேர்ந்த நாள் இது. சந்திர பகவான், கார்த்திகை, ரோகிணி உள்ளிட்ட 27 நட்சத்திரங்களை மனைவியராக அடைந்த புண்ணிய தினம்.

ராமபிரான்-சீதாதேவி, பரதன் -மாண்டவி, லட்சுமணன்-ஊர்மிளை, சத்ருக்னன்-ச்ருத கீர்த்தி ஆகியோருக்கு திருமணம் நடந்த தினம். இமவான் தன் மகள் பார்வதியை சிவனுக்கு திருமணம் செய்ய தேர்ந்தெடுத்தது இந்த நாளில் தான்.

மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணம் நடந்தது இந்த நாளில் தான். ஆண்டாள்-ரங்கமன்னார் திருமணம் நடந்தது இந்த நாளில் தான். இந்த நாளில் தான் இடும்பன் மூலம் காவடி தூக்கும் பழக்கம் ஆரம்பித்தது. அர்ச்சுனன் பிறந்தது பங்குனி உத்திரத்தில்தான்.

வள்ளி அவதாரம் செய்தது பங்குனி உத்திரத்தில்தான். காஞ்சியில் காமாட்சி அம்மன் ஆற்று மணலை சிவலிங்கமாக பிடித்து வழிபட்டு சிவனின் அருளைப் பெற்றது இந்த நாளில் தான்.

தனது தவத்தைக் கலைத்த மன்மதனை, சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரித்து சாம்பலாக்கினார். பின்னர், தன்னை வணங்கி மன்றாடிய ரதிதேவியின் வேண்டுகோளுக்கு இரங்கி, மன்மதனை மீண்டும் சிவனார் உயிர்ப்பித்தது பங்குனி உத்திரம் திருநாளில்தான். சுந்தரமூர்த்தி நாயனாருக்கு மணக்கோலத்தில் பரமன் காட்சி தந்தது இந்த நாளில்தான்.







# வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தி

சிவாலயங்களில் கல்லால மரத்தின் கீழ், தட்சிணாமூர்த்தி சீடர்களுடன் தெற்கு நோக்கி வீற்றிருப்பார். இவர் பேசுவதில்லை. சைகை மூலம் உலகத்திற்கு பெரும் தத்துவத்தைச் சொல்கிறார். இவருக்கு ஊமைத்துரை, மௌனச்சாமி என்ற பெயர்கள் உண்டு.

மௌனமாக இருப்பது வழிபாட்டு வகைகளில் ஒன்றாகும். மௌனத்தில் மூன்று வகை உண்டு. அவை உடல் மௌனம், வாக்கு மௌனம், மன மௌனம் என்பன. உடலைச் சிறிதும் அசைக்காமல் கட்டைபோல இருப்பது உடல் மௌனம். இவர்கள் பத்மாசனத்தில் அமர்ந்து சின்முத்திரை காட்டி தியானத்தில் ஆழ்ந்திருப்பர். வாக்கு மௌனம் என்பது பேசாமல் அமைதி காப்பதாகும். மனதாலும் மௌனமாக இருப்பதே மன மௌனம். இந்த மௌனங்களைக் கடைபிடிப்பவர்கள் ஞானநிலை எய்துவதுடன், கடவுளோடு பேசி, உறவாடும் சக்தியையும் பெறுகிறார்கள். மேலும், தொட்டது துலங்கும்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு வியாழக்கிழமையில் செய்ய வேண்டிய பரிகாரங்கள்: வியாழக் கிழமைதோறும் சிவன் கோவிலுக்குச் சென்று, அங்கு பிரகாரத்தில் உள்ள ஸ்ரீதட்சிணாமூர்த்தி சுவாமிக்கு அர்ச்சனை அல்லது கற்பூர ஆரத்தி செய்து வணங்கி வருவது நல்லது.

# வெள்ளிக்கிழமை விரதம்

வெள்ளிக்கிழமை விரதம் அம்பிகை, முருகன் ஆகியோருக்கு உரியது. இந்த விரதத்தை மேற்கொண்டால் கணவன், மனைவி ஒற்றுமை நிலைக்கும். சுகபோக வாழ்வு உண்டாகும். வாகனயோகம் அமையும்.

வெள்ளிக் கிழமைகளில் வீட்டில் விளக்கேற்றி, பூஜைகள் செய்து இறைவனை வழிபட்டால் நன்மை உண்டாகும். அத்துடன், இந்த நாட்களில் ஆலயங்களிலும் சிறப்பான பூஜைகள் நடத்தப்படுவது வழக்கமாகும்.

15 வெள்ளிக்கிழமை அம்பாளிற்கு (மகாலட்சுமி) மல்லிகை, செந்தாமரை, மனோ ரஞ்சிதம் ஆகிய பூக்களில் ஏதாவது ஒரு பூவினால் அர்ச்சனை செய்து சர்க்கரைப் பொங்கல், வெள்ளை மொச்சை படைத்து பூஜை செய்யவும். இதனால் புகழ், செல்வம், வியாபார அபிவிருத்தி, புத்திரப்பேறு, குடும்ப ஒற்றுமை உண்டாகும்.

வெள்ளியில் மாரியம்மன் முதலான அம்மனைத் தரிசனம் செய்து வேண்டினால், நன்மை உண்டாகும். மங்காத செல்வங்கள் தந்து காத்தருள்வாள் தேவி என்பது ஐதீகம்! குறிப்பாக, ராகுகால வேளையில் எலுமிச்சை தீபமேற்றி வழிபட்டால், காரியத் தடைகள் எல்லாம் நீங்கும்.







# காட்டுப் பகுதியில் அழிவடைந்து கொண்டிருக்கும் ஆயிரமாண்டு பழமையை பாதுகாப்போம்

- பேராசிரியர் புஸ்பரட்ணம்

இலங்கையில் இந்து மதத்திற்கு 2,500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு. பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி எழுந்த பாளி இலக்கியங்கள், கி.மு.3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் இந்து மதமும், அம்மதம் சார்ந்த ஆலயங்களும் இருந்ததாகக் கூறுகின்றன. அவற்றுள் கிழக்கிலங்கையில் இருந்த இன்றைக்கு 1,600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று சிவன் ஆலயங்கள் பற்றி மகாவம்சம் கூறுகின்றது.

சமகால இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்கள் புதுப் பொலிவுடன் காணப்படுகின்றன. அவற்றுள் கணிசமான ஆலயங்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில், சுதேச மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர், பழைய ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது பழைய ஆலயங்களின் பெயரை நினைவுப்படுத்திப் புதிய இடங்களில் கட்டப்பட்டவையாக உள்ளன. போத்துக்கேயர் ஆட்சிக்கு முன்னர் இம்மாகாணங்களில் இருந்த ஆலயங்கள் பற்றி இலக்கியங்கள், புராணங்கள்,

கல்வெட்டுகள், ஐரோப்பியர் கால ஆவணங்கள் என்பவற்றில் பல வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஆயினும் தற்காலத்தில் அவ்வாலயங்கள் இருந்த ஒரு சில இடங்களில் மட்டும் அவ்வாலயங்களின் அழிபாடுகளை அடையாளம் காணமுடிகின்றது. ஆயினும் அவ்வழிபாடுகளை வைத்து அவ்வாலயங்களின் கட்டிட அமைப்பையோ, கலைமரபையோ, வழிபாட்டிலிருந்த தெய்வங்கள் பற்றியோ அறிய முடியவில்லை. இதற்கு இம்மாகாணங்களின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய போத்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும், சுதேச மதங்களுக்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இவ்வாலயங்கள் அழிக்கப்பட்டதே காரணமாகும். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களின் கட்டிடப் பாகங்களைக் கொண்டே அவர்களின் ஆட்சிக்காலக் கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள், நிர்வாகக் கட்டிடங்கள் என்பன கட்டப்பட்டன.

இந்த உண்மையை அவர்களின் ஆட்சி ஆவணங்களே உறுதி செய்கின்றன. இதைத் தற்போது யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வில் கிடைத்து வரும் இந்து ஆலயங்களுக்குரிய கட்டிடப் பாகங்கள் மேலும் உறுதி செய்கின்றன. இருந்த போதிலும் போத்துக்கேயர், ஒல்லாந்தர்





ஆட்சியில் அவர்களின் ஆதிக்கம் பெரும்பாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அண்டிய மாகாணங்களில் ஏற்பட்டிருந்ததனால் அவர்களின் கலையழிவுக் கொள்கையில் இருந்து மாகாணங்களின் உட்பகுதியில் இருந்த ஆலயங்கள் தப்பித்திருக்க இடமுண்டு. அவற்றில் ஒன்றாகவே திருமங்கலாய்ச் சிவன் ஆலயத்தைப் பார்க்கின்றேன்.

இவ்வாலயம் திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட திருமங்கலாய் என்ற வரலாற்றுப் பழைமை வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பற்றி திருகோணமலை தலபுராணங்களில் ஒன்றான திருகரைசை புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது இவ்வாலயம் கிளிவெட்டியின் பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் மின்சார வேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில் காணப்படுகின்றது.

தற்போது இவ்வாலயத்தின் பெரும்பகுதி முற்றாக அழிவடைந்து, அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் அவ்வாலயத்தின் கட்டிட அமைப்பையும், அதன் கலை மரபையும், ஆலயம் தோன்றி வளர்ந்த காலத்தையும்









உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது. கருங்கற்களையும், செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயத்தின் கர்பக் கிரகமும், அதன் மேலமைந்த விமானமும் முற்றாக அழிவடைந்து அதன் கட்டிடப் பாகங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. கர்பக்கிரகம் இருந்த இடம் பிற்காலத்தில் புதையல் எடுப்போரால் தோண்டப்பட்டு, அவ்விடம் தற்போது ஒரு குழியாகக் காணப்படுகின்றது.

கர்பக் கிரகத்திற்கு முன்னால் அழிவடைந்து காணப்படும் அந்தராளத்தில் ஆலய காலப் பொருட்கள் சிலவற்றுடன் பிற்காலத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்ட சிவலிங்கமும் காணப்படுகின்றது. அந்தராளத்திற்கு முன்னால் மகாமண்டபமும், பலி பீடமும் அத்திவாரங்களும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட அலங்காரத் தன்மை கொண்ட பல கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன. இம்மகாமண்டத்திற்கு வலப்பக்கமாகப் பயன்படுத்தப்படாத நிலையில் கருங்கற்களான மாடங்கள், தெய்வச் சிலைகள் வைப்பதற்குப் பயன்படுத்திய பீடங்கள் மற்றும் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

மகாமண்டபத்தின் இடப்பக்கமாக ஆலயத்தில் பயன்படுத்தியிருந்த கோமுகிகள். சந்தனம் அரைக்கும் கற்கள். கபோத வடிவிலமைந்த அரைவட்டத் தூண்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்திற்கு மிக அருகில் கருங்கற்களைக் கொண்டு சற்சதுர வடிவில் ஆழமாகக் கட்டப்பட்ட ஆலயத்தின் தீர்த்தக் கிணறு காணப்படுகிறது. மேலும், இவ்வாலயத்தைச் சுற்றி சுற்று மதில்களும், அவற்றிடையே துணைக் கோவில்களும் (பரிவாரத் தெய்வங்கள்) இருந்திருக்கலாம் என்பதை அவற்றிற்குரிய அத்திவாரங்களும், பரவலாகக் காணப்படும் செங்கட்டிகளும், கருங்கற்களும் உறுதிப்படுத்துகின்றன.

**தொடரும்**

# வாழ்வும் சாவும்



ஒரு சிறுவனுக்கு நெடு நாட்களாய்த் தீராத சந்தேகம். அந்தச் சிறுவனின் பெற்றோருக்கோ சிறுவனுக்குப் புரிந்த மொழியில் சொல்ல முடியாத இயலாமை. ஒரு நாள் மூவரும் ரமண மகரிஷியைச் சந்திக்கச் சென்றிருந்த போது, சிறுவன் ரமணரை நெருங்கி, தன் கேள்வியை முன் வைத்தான்.

“தியானம் என்றால் என்ன?”

சிரித்துக் கொண்டே அந்தச் சிறுவனுக்கு இலையில் ஒரு தோசையைப் பறிமாறச் சொன்னார்.

சிறுவனிடம் “நான் எப்போ ‘ம்’ சொல்றேனோ அப்போ சாப்பிட ஆரம்பிக்கணும். அதே மாதிரி.. எப்போ ‘ம்’ சொல்றேனோ, அதுக்கப்புறம் இலையில் தோசை இருக்கக் கூடாது. புரிஞ்சுதா?” என்றார் சிரித்துக் கொண்டே..

சிறுவனுக்கு ஒரே உற்சாகம். சுற்றியுள்ளோருக்குக்கோ ஒரே குழப்பம்.

சிறுவன் மகரிஷியின் ‘ம்’ க்காகத் தோசையில் ஒரு கையை வைத்தபடி தவிப்புடன் அவர் முகத்தைப் பார்த்தபடி இருந்தான்.

சிறுவனை சிறிது காக்க வைத்து பின் ‘ம்’ சொன்னார் ரமணர்.

அடுத்த சில நிமிஷங்களுக்குள் இரண்டாவது ‘ம்’ வந்து விடக் கூடாதே என்ற பதைப்புடன் பெரிய, பெரிய விள்ளல்களாக எடுத்து அவசர அவசரமாக திணித்துக் கொண்டே மகரிஷியின் முகத்தை கவனிப்பதும், தோசையைப் பிய்த்து உண்பதுமாக நேரம் கரைந்தது.

ரமணர் புன்னகை மாறாமல் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாரே ஒழிய ‘ம்’ சொல்வதாக இல்லை.

தோசையோ சிறுத்து ஒரு சிறு விள்ளலாக மாறியிருந்தது இப்போது.

சிறுவனும் அந்த விள்ளலில் கையை வைத்தபடி, எப்படா இந்தத் தாத்தா ‘ம்’ சொல்லுவார் என்று காத்திருந்தான். சுற்றியுள்ளவர்களுக்கும் என்ன தான் நடக்கப் போகிறது என்றறிய ஆவல்.

எதிர்பாராத ஒரு நொடியில் ‘ம்’ சொல்லவும் சிறுவன் சடாரென்று கடைசி விள்ளலை வாயில் போட்டுக் கொண்டான்.

ரமணர் புன்னகைத்தபடி “இரண்டு ‘ம்’ – களுக்கு நடுவில் உன் கவனம் எப்படித் தோசை மேலும், என் மேலும் இருந்ததோ, அதே போல் நீ எந்தக் காரியம் செய்தாலும், அடிநாதமாக இறைவன் மேல் கவனம் வைத்து இருப்பாயானால், அதன் பெயர் தியானம்.. புரிந்ததா இப்போ?” என்றார் மகரிஷி புன்னகைத்தபடி.

ரமணர் சொன்ன அந்த இரண்டு ‘ம்’ கள் – 1.வாழ்வு‘ம்’, 2. சாவு‘ம்’

# திருமாலுக்கு உகந்த துளசி பூஜை



அலங்கார பிரியரான திருமாலுக்கு உகந்தது துளசி. திருமாலின் திருமார்பில் மாலையாக மகிழ்வோடு காட்சி தருபவள் துளசி தேவி. 'துளசி' என்ற சொல்லுக்கு 'தன்னிகரற்றது' என்று பொருளாகும்.

'துளசி தீர்த்தத்தால் எனக்கு அபிஷேகம் செய்தால், பல ஆயிரம் அமிர்தக் குடங்களால் அபிஷேகம் செய்த ஆனந்தமடைவேன்' என்று மகாவிஷ்ணுவே கூறியுள்ளார்.

துளசி செடியின் நுனியில் பிரம்மாவும், அடியில் சிவபெருமானும், மத்தியில் திருமாலும் வாசம் செய்கின்றனர். இவர்கள் தவிர சூரியன், தேவர்கள், கங்கை உள்ளிட்ட புனித நதிகளும் துளசி செடியில் வசிப்பதாகப் புராணங்கள் தெரிவிக்கின்றன.



துளசி இலை பட்ட தண்ணீர், கங்கை நீருக்குசட சமமானதாக கருதப்படுகிறது. துளசி பூஜை செய்வதால் எட்டு வகை செல்வங்களும் கிட்டும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் கைகூடும். துளசி திருமாலுக்கும், திருமகளுக்கும் மிகவும் பிடித்தமானது. துளசி இருக்கும் இடத்தில் மகாவிஷ்ணு நிறைந்து இருப்பார் என்பது ஐதீகம்.

பார்வதி தேவி, துளசி பூஜை செய்ததால் சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றாள். அதைப்போல் துளசி பூஜை செய்ததால் அருந்ததிதேவி வசிஷ்டரை மணந்தாள். ருக்மணி கிருஷ்ணரை மணவாளனாக அடையும் பேறு பெற்றாள். கருட பகவான் விஷ்ணுவுக்கு வாகனமாக மாறியதும், அவர் செய்த துளசி பூஜையின் மகிமையால் தான்.

சாவித்திரி துளசி பூஜை செய்ததால்தான் தீர்க்க சுமங்கலியாக வாழ்ந்தாள். விநாயகர் கஜாக சூரனை வென்று, விக்னேஷ்வரன் என்ற பட்டத்தை பெற்றதும் துளசி பூஜையால்தான்.



# ஆஞ்சநேயரை வெண்ணெய் சாத்தி வழிப்படுவதற்கான காரணங்கள்

ஆஞ்சநேயரை பல விதமான முறைகளில் வழிபாடு செய்வதால், நினைத்தது நினைத்த நேரத்தில் நடைபெறும் என்பது, நம் முன்னோர்களின் நம்பிக்கையாகும். ராமர் பெயரை மனதில் சொல்லி வணங்குவதே ராமநாத வழிபாடு ஆகும். இந்த முறையில் ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது, மிக நல்ல பலன்களை தரும். இராவணன் சம்ஹாரத்திற்குப் பிறகு, தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த இரண்டு அசுரர்களை சம்ஹாரம் செய்வதற்கு அனுமனை தேர்ந்தெடுத்தனர் தேவர்கள். அனுமனுக்கு போரில் உதவ, ஒவ்வொரு கடவுளும் அவருக்கு உரிய ஆயுதங்களை ஆசிர்வாதம் செய்து அளித்தார்கள்.

ஸ்ரீராமர் வில்லையும், பிரம்மாவும், சிவபெருமானும் இன்னும் மற்ற கடவுள்களும் சக்தி வாய்ந்த மற்ற ஆயுதங்களையும் அளித்தார்கள். ஸ்ரீ கண்ணபெருமான் வெண்ணை அளித்து 'இந்த வெண்ணை உருகுவதற்குள் உனது காரியம் வெற்றியடையும், அசுரர்களையும் அழித்து விடலாம்' என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

அதன்படி அனுமன் கையில் அசீர்வாதமாக அளிக்கப்பட்ட வெண்ணெய் உருகுவதற்குள் இரண்டு அசுரர்களையும் போரில் சந்தித்து, வெற்றி பெற்று, அவர்களை அழித்து விட்டார். ஆகவே அதே போல நாம் அனுமனை வெண்ணெய் சாத்தி வழிபட்டால், நாம் சாத்திய வெண்ணெய் உருகுவதற்குள் நாம் நினைத்த காரியங்கள் கைகூடும் என்பது ஐதீகம்.

# என்ன நடக்க வேண்டுமோ நிகழ்ந்தே தீரும்

ஒருநாள் எமதர்மராஜன் ஒரு குருவியை, வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தார்; ஆஹா, இந்த குருவிக்குக் கேடு காலம் வந்துவிட்டதே! என்பதை உணர்ந்த கருட பகவான், (கருட பகவான் என்பது பகவான் விஷ்ணுவை சுமந்து செல்லும் கழுகு. இது கழுத்தில், வெள்ளை நிறமும், உடலில் ப்ரவுன் நிறத்திலும் இருக்கும்) உடனடியாக அந்தக் குருவியைத் தூக்கிக் கொண்டு, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு மரப்பொந்தில் பாதுகாப்பாக வைத்தது.

அந்தப் பொந்தில் வசித்து வந்த ஒரு பாம்பு, கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த குருவியை விழுங்கி விட்டது; குருவியைக் காப்பாற்ற நினைத்து, அந்தக் குருவிக்கே எமனாகி விட்டோமே! என்று கருடபகவான் குருவி இறந்த துக்கத்தில் மீண்டும் எமதர்மராஜன் இருந்த இடத்திற்கே திரும்பி வந்தது.

அப்போது எமதர்மன், கருட பகவானை கூர்ந்து கவனித்தார். அதற்கு கருடபகவான், “நான் பகவான் விஷ்ணுவை முதுகில் சுமந்து செல்வதால் என்னை உம்மால் ஒன்றும் செய்ய முடியாது” என்று கோபத்தில் கத்தியது.

இதைக் கேட்ட எமதர்மராஜன் கருடபகவானிடம், “நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள்; நான் அந்தக் குருவியை உற்று நோக்கக் காரணம், அந்த குருவி சில நொடிகளில் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வசித்த ஒரு பாம்பின் வாயால் இறக்க நேரிடும் என எழுதப்பட்டிருந்தது; அது எப்படி நிகழப் போகிறது? என்பதை யோசித்துக் கொண்டு இருந்தேன்; அதற்குள் விதிப்படியே நடந்து விட்டது” என்று கூறினாரம்..

அவ்வப்போது என்ன நடக்க வேண்டுமோ நிகழ்ந்தே தீரும். அதனால் வாழ்வில் நடக்கப் போவதை குறித்துக் கவலைபட்டுக் கொண்டே இருக்காமல், செய்வதை திறம்பட சிறப்பாய் செய்வோம்.



# நவகிரகங்களை வழிப்படுவதால் உண்டாகும் பலன்கள் !!



நவகிரகங்களை வழிபடுவதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. நவகிரகங்கள் இருக்கும் திசையை நோக்கி வழிபட வேண்டும் என்கின்றனர் ஜோதிட வல்லுநர்கள். சூரியனை வழிபட்டால் வாழ்வில் மங்களமும், ஆரோக்கியமும் கிடைக்கும். சந்திரனை வணங்கினால் புகழ் கிடைக்கும்.

செவ்வாயை வழிபடுவதால் நம்முடைய தைரியம் அதிகரிக்கும். புதனை வழிபட்டால் நல்ல புத்தியும், அறிவாற்றலும் அதிகமாகும். குரு பகவானை வணங்கினால் செல்வ செழிப்பும், குழந்தை பாக்கியமும் கிடைக்கும். சுக்கிரனை வணங்கினால் நல்ல மனைவி, வீடு, மனை அமையும் யோகம் உண்டாகும்.

சனிபகவானை வழிபட்டால் ஆயுள் பலம் பெறும். ராகுவை வணங்கினால் பயணத்தில் நன்மை கிடைக்கும். கேதுவை வணங்கினால் ஞானம் பெருகும். மோட்சம் கிடைக்கும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். அந்தந்த கிழமைக்கு ஏற்றவாறு அந்தந்த கிரகங்களை வழிபடும் போது நமக்கு ஏற்படும் பலன்கள் கூடுதலாக கிடைக்கும்.

# சிவனுக்கு உகந்த மாசிமகம்



சிவபெருமான் வருணனிற்கு சாப விமோசனம் அளித்ததும் இந்நாளிலேயாகும். இதனால் சிவனை வழிபடுவதற்கும் உகந்த நாளாகிறது மாசிமகம். உமா தேவியார் மாசிமாதம் மக நட்சத்திரத்தில்தான் தட்சனின் மகள் தாட்சாயணியாக அவதரித்தார் என்பதால், மிகவும் புண்ணிய நாளாகக் கருதப்படுகிறது.

மாசிமகம் பெண்களுக்குரிய விரத தினமாகவும் போற்றப்படுகிறது. மேலும் சக்தி வழிபாட்டிற்குரிய நாளாகிறது. தந்தைக்கு முருகன் மந்திர உபதேசம் செய்த நாளும் மாசிமகம்தான். இதனால் முருகனை வழிபடுவதற்கும் சிறப்பான நாளாக மாசிமகம் அமைகிறது.

பாதாளத்தில் இருந்த பூமியை பெருமாள் வராக அவதாரம் எடுத்து வெளிகொணர்ந்த நாளும் மாசிமகத்தன்றுதான். இதனால் இந்நாள் பெருமாளை வணங்குவதற்குரிய நாளும் ஆகிறது.

எல்லா தெய்வங்களையும் வழிபடுவதற்கான சிறப்பு நாளாக அமைகிறது மாசிமகம். இந்த நன்னாள் தோஷம் நீக்கும் புண்ணிய நாளாக கருதப்படுகிறது.

19 ஆம் ஆண்டில்

**Radio - by - Phone**

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

**00 4934 5483411998**

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

**00 49 231 700 977 60**

அழையுங்கள்! வானொலியைக்
கேட்டு மகிழுங்கள்..!!

மேலதீக விபரங்களுக்கு...
www.etr.fm

